## இலங்கை மத்திய வங்கி - 2017

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1 அபிப்பிராயம்

---

இலங்கை மத்திய வங்கியின் ("வங்கி") 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் நாணய அதிகாரச்சட்டத்தின் 42(2) ஆம் பிரிவு (422 ஆம் அத்தியாயம்) ஆகியவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இக் கணக்காய்வை மேற்கொள்கையில், சர்வதேச நிதிசார் அறிக்கையிடல் நியமங்களுடனான இணக்கப்பாட்டினை பரீட்சிப்பதற்காக பொதுத் தொழிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றால் எனக்கு உதவியளிக்கப்பட்டது.

வங்கியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சர்வதேச நிதிசார் அறிக்கையிடல் நியமங்களிற்கு (ஐஎவ்ஆர்எஸ்எஸ்) இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் அனைத்துப் பொருண்மையான விடயங்களையும் நியாயமாக பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ஐஎஸ்ஏஎஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த அறிக்கையிலுள்ள நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரது பொறுப்புக்கள் பந்தியில் அந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் மேலும் விபரிக்கப்படுகின்றன. இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட ஒழுக்கநெறிக் கோவைக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கணக்காய்வுடன் தொடர்புடைய ஒழுக்கநெறி தேவைப்பாடுகளிற்கு அமைய நான் வங்கியின் செயற்பாடுகளிலிருந்து சுயாதீனமானவனாக உள்ளேன் என்பதுடன் இத் தேவைப்பாடுகளிற்கு இணங்க எனது ஏனைய ஒழுக்கநெறிப் பொறுப்புக்களையும் நான் நிறைவேற்றியுள்ளேன். எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.3 நாணயச் சபையின் பொறுப்புக்கள்

---

இந்நிதிக்கூற்றுக்களை சர்வதேச நிதிசார் அறிக்கையிடல் நியமங்களிற்கு (ஐஎவ்ஆர்எஸ்எஸ்) இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென நாணயச் சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு வங்கியின் நாணயச் சபை பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், வங்கியின் தொடர்ந்தியங்கும் நிலையை தொடருவதற்கான இயலுமையினை வெளிப்படுத்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய பிரயோகித்தக்க விடயங்கள் என்பவற்றை மதிப்பாய்வு செய்வதற்கும் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருக் கணக்கீட்டு அடிப்படையினைப் பயன்படுத்துவதற்கும் நாணயச் சபை பொறுப்பாக உள்ளது.

வங்கியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்வதற்காக அவை ஆளுகைக்குட்பட்டு பொறுப்புடையதாக உள்ளன.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரது பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் சர்வதேச கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

சர்வதேச கணக்காய்வு நியமங்களின் (ISAs) பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பிடுதல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்தல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் மற்றும் ஏனைய உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால், மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவைபெற்றுக் கொள்வதற்காகவேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பிடுதல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நாணயச் சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு வங்கிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க

ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும், பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. இருப்பினும், எதிர்கால நிகழ்வுகளும் நிலைமைகளும் வங்கியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடை நிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பிடுதல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட ஏனைய விடயங்களான கணக்காய்வின் திட்டமிடப்பட்ட நோக்கெல்லையும் காலமும் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டிலுள்ள எவையேனும் முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கலாக முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பில் நாணயச் சபையுடன் நான் தொடர்பாடுகின்றேன்.

## 2. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

2016 ஏப்ரல் 29 ஆம் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வங்கி தனது ஊழியர்களிடமிருந்து அறவிடுவதற்குப் பதிலாக அதன் சொந்த நிதிகளிலிருந்து மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக முறையே ரூபா 355 மில்லியன் மற்றும் ரூபா 363 மில்லியன் கூட்டுத்தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரி (பிஏவைஈ) மற்றும் வரி மீதான வரி என்பவற்றைச் செலுத்தியிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான வங்கியின் செயற்பாடுகள் அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் ரூபா 24,014 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய நட்டத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 50,194 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை விளைந்திருந்தமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 26,180 மில்லியன் முன்னேற்றமொன்றைச் சுட்டிக்காட்டுகின்றது. தேறாத விலை மீள்மதிப்பீடுகளிலிருந்தான நயம் ரூபா 14,261 மில்லியனால் அதிகரித்தமை மற்றும் வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம் ரூபா 8,045 மில்லியனால் அதிகரித்தமை என்பன நிதி விளைவுகளில் ஏற்பட்ட இந்த முன்னேற்றத்திற்கு பங்களித்த பிரதான காரணங்களாகும்.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

முன்னைய ஆண்டின் ரூபா 36 பில்லியன் தொகையான (ரூபா 6.8 பில்லியன் தேறிய அந்நியச் செலாவணி மீள்மதிப்பீட்டு நட்டம் உள்ளடங்கலாக) மொத்த தேறிய செயற்பாட்டு வருமானத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான வங்கியின் மொத்த தேறிய செயற்பாட்டு வருமானம் ரூபா 3.8 பில்லியன் தேறிய அந்நியச் செலாவணி மீள்மதிப்பீட்டு நட்டம் உள்ளடங்கலாக ரூபா 60.6 பில்லியனாக காணப்பட்டமையால், மொத்த தேறிய

செயற்பாட்டு வருமானத்தில் 68 சதவீத முன்னேற்றமொன்றைச் சுட்டிக்காட்டுகின்றது. அதேநேரம், முன்னைய ஆண்டின் பெறுமானத்தேய்வு மற்றும் காலக்கழிவு செலவினங்கள் என்பவற்றை உள்ளடக்கிய செயற்பாட்டுச் செலவினமான ரூபா 12 பில்லியனுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் அது ரூபா 10.4 பில்லியனாக இருந்தமையால் செயற்பாட்டுச் செலவினங்களில் 13.3 சதவீத வீழ்ச்சியொன்றைச் சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வாண்டின் போதான வங்கியின் வருமானம் மற்றும் செலவின முரண்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்து கீழே காட்டப்படுகின்றன.

| | **2017** | **2016** | **முரண் {சாதகம்/(பாதகம்)}** | |
|---|---|---|---|---|
| | **ரூபா பில்.** | **ரூபா பில்.** | **ரூபா பில்.** | **சதவீதம்** |
| **வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்களிலிருந்தான வருமானம்** | **49.7** | **26.4** | **23.3** | **88.3** |
| வட்டி வருமானம் | 22.9 | 14.9 | 8 | 53.7 |
| தேறாத விலை மீள்மதிப்பீடுகளிலிருந்தான நயம்/ (நட்டம்) | 24.0 | 9.7 | 14.3 | 147.4 |
| தேறிய விலை மாற்றங்களிலிருந்தான நயம் | 2.8 | 1.8 | 1 | 55.6 |
| **வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள் மீதான செலவினம்** | **3.0** | **3.9** | **0.9** | **23.1** |
| வட்டிச் செலவினம் | 3.0 | 3.9 | 0.9 | 23.1 |
| **தேறிய அந்நியச் செலாவணி மீள்மதிப்பீட்டு நயம்/ (நட்டம்)** | **(3.8)** | **(6.8)** | **3** | **44.1** |
| **உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்களிலிருந்தான மொத்தத் தேறிய வருமானம்/ (செலவினம்)** | **16.1** | **18.8** | **(2.7)** | **(14.4)** |
| ஏனைய வருமானம் | 1.6 | 1.5 | 0.1 | 6.7 |
| செயற்பாட்டுச் செலவினங்கள் | 10.4 | 12 | 1.6 | 13.3 |
| பிடித்துவைத்தல் வரி | 1.8 | 1.8 | 0 | 0.0 |
| **வரிக்குப் பின்னர் ஆண்டிற்கான தேறிய இலாபம்/ (நட்டம்)** | **48.4** | **22.2** | **26.2** | **118.0** |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்களிலிருந்தான வருமானம் 88.3 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் உள்ளூர் நாணய நிதிச் சொத்துக்களிலிருந்தான மொத்த தேறிய வருமானம் 14.4 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) குற்றி நாணயங்களின் சேகரிப்பு மற்றும் விநியோகத்திற்காக புதிய பொறிமுறையொன்றை அபிவிருத்தி செய்தல்**

தந்திரோபாயத் திட்டத்தின் (2016 – 2018) பிரகாரம், நாணச் சபையால் 2015 நவம்பர் 24 இல் நடைபெற்ற அதன் கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் 2016 மார்ச் 23 இல் வங்கியின் குற்றி நாணய சேகரிப்பு செயன்முறையை வசதிப்படுத்துவதற்காக காசு சேகரிக்கும் கம்பனிகளிடமிருந்து ஆர்வ வெளிப்படுத்தல் (Expressions of Interest) (ஈஓஐ) கோரப்பட்டிருந்தது. ஐந்து கம்பனிகளிடமிருந்து பெறப்பட்ட ஈஓஐ இனை மதிப்பீடு செய்த பின்னர் அக் கம்பனிகள் வேண்டப்பட்ட ஆகக் குறைந்த புள்ளிகளை பெற்றிருக்காததன் காரணமாக மதிப்பீட்டுக் குழு ஈஓஐஎஸ் இனை இரத்துச் செய்வதற்கு தீர்மானித்திருந்தது. அதற்கிணங்க நாடு முழுவதும் குற்றி நாணய விநியோகத்தினை விட குற்றி நாணய சேகரிப்பிற்காக புதிய பொறிமுறையொன்றை அபிவிருத்தி செய்வதற்கான தந்திரோபாய நடவடிக்கையொன்றை வங்கி அமுல்ப்படுத்தியிருக்கவில்லை.

**(ஆ) நிதித் துறை ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித்திட்டம்**

பொருளாதாரத்தின் வளர்ச்சியடையும் கேள்விகளை பூர்த்தி செய்வதற்காக உள்வாரி மற்றும் வெளிவாரி தாக்கங்களிற்கான முன்னேற்றப்பட்ட மீட்சியுடன் வலுவான வங்கி/ வங்கியல்லாத நிதி நிறுவனத் துறையொன்றை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் 2014 சனவரி 17 இல் நிதித் துறை ஒன்றிணைப்பு மீதான பிரதான திட்டத்தை வங்கி வெளியிட்டிருந்தது. அதற்கிணங்க வங்கிகள், நிதிக் கம்பனிகள் மற்றும் குத்தகைக் கம்பனிகள் உள்ளடங்கலாக 17 நிறுவனங்களுடனான ஒன்றிணைப்புத் திட்டங்கள் ரூபா 68 மில்லியன் செலவிட்டு 2017 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் 16 நிறுவனங்களுடனான ஒன்றிணைப்புத் திட்டங்கள் தொடர்பாக வங்கி ரூபா 59 மில்லியன் தொகையை செலவிட்டிருந்த போதிலும் அவை 2018 ஏப்ரல் மாத இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேற்படி செலவினத்திற்கு மேலதிகமாக மேற்படி ஒன்றிணைப்புத் திட்டங்களில் உள்ளடக்கப்பட்டிருக்காத 20 நிறுவனங்கள் தொடர்பான தகவல் விஞ்ஞாபனம், ஆற்றப்பட வேண்டிய முயற்சி (Due Diligence), மதிப்பீட்டு அறிக்கைகள் மற்றும் ஏனைய விடயங்களை தயாரிப்பதற்காக ரூபா 59 மில்லியன் மேலதிக தொகையை வங்கி செலவிட்டிருந்தது.

**(இ) நிதிக் கம்பனிகளை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்தல்**

இலங்கை நாணயச் சபையால் 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதியியல் வணிக அதிகாரச்சட்டத்தின் கீழ் நிதிக் கம்பனிகள் ஒழுங்குபடுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்படுகின்றன. நிதியியல் வணிக அதிகாரச்சட்டத்தின் 12(1) ஆம் பிரிவின் பிரகாரம், மேற்கொள்ளப்பட வேண்டிய அத்தகைய நிதிக் கம்பனிகளின் வணிக மற்றும் கூட்டிணைந்த விவகாரங்களின் ஏதாவது அம்சங்கள் தொடர்பாக நாணயச் சபையானது நிதிக் கம்பனிகளிற்கு நெறிப்படுத்தல்களை வழங்கலாம். எவ்வாறாயினும் நிதியியல் வணிக அதிகாரச்சட்டத்தின் 12(1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட பின்வரும் விடயங்கள் தொடர்பாக 2018 ஏப்ரல் மாத இறுதி வரையிலும் எந்தவொரு நெறிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

| உட்பிரிவு இல. | விடயங்கள் |
|---|---|
| ஆ | - கடன்கள், கடன் வசதிகள் அல்லது அத்தகைய கம்பனிகளால் வழங்கப்பட்ட நிதிசார் வசதிகளின் (accommodation) ஏனைய வகைகள் மீது விதிக்கப்படக்கூடிய ஆகக் கூடிய வட்டி வீதங்கள். |
| | - ஏதாவது அத்தகைய கடன்கள், கடன் வசதிகள் அல்லது நிதிசார் வசதிகளின் ஏனைய வகைக்கான ஆகக்கூடிய காலப்பகுதிகள். |
| ஒ | - வைப்புக்களின் வைப்பாளர்களால் முதிர்வடைவதற்கு முன்னர் பணத்தை மீளப்பெறுவதற்காக பிரயோகிக்கப்பட வேண்டிய நிபந்தனைகள். |
| ஔ | - குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிகளினுள் அதிகரிக்கப்படக்கூடிய அத்தகைய கம்பனிகளால் மேற்கொள்ளப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதாவது கடன்கள், முதலீடுகள் அல்லது நிதிசார் வசதிகளின் தொகையில் விலைவீதத்திற்கான எல்லைகளை நிர்ணயித்தல். |
| கா | - இந்த உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நபர்களால் நடாத்தப்படக்கூடிய நிதிக் கம்பனியொன்றில் உள்ள பங்கு மூலதனத்தின் ஆகக்கூடிய சதவீதம். |
| கி | - பாதுகாப்பான ஒதுக்கீடுகள் (Secured accommodation) தொடர்பில் அத்தகைய கம்பனிகளால் பேணப்பட வேண்டிய எல்லைகள். |
| கு | - சம்பளம், படி, கட்டணங்கள் (perquisites), செலவினங்களின் மீளளிப்பு, இறுதி நலன்கள், பணிக்கொடைகள் மற்றும் ஏனைய ஓய்வூதியக் கொடுப்பனவுகள் மூலமான அத்தகைய கம்பனிகளின் பணிப்பாளர்கள் அல்லது ஊழியர்களிற்கான கொடுப்பனவு. |
| கோ | - காணிகளின் (real estate) கொள்வனவு மற்றும் அவற்றின் விலையை நிர்ணயித்தல் என்பவற்றில் அத்தகைய கம்பனிகளால் பின்பற்றப்பட வேண்டிய விதிமுறைகள், நிபந்தனைகள் மற்றும் நடைமுறைகள். |
| ச | - இவ் அதிகாரச்சட்டத்தின் கீழ் சபையால் விதிக்கப்படக்கூடிய ஏதாவது தண்டப்பணக் கொடுப்பனவை உறுதிப்படுத்துவதற்கு சபையால் நிர்ணயிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பெறுமதிக்காகவும் அத்தகைய விதிமுறைகள் மீதும் நிதிக் கம்பனியொன்றால் வங்கி உத்தரவாதமொன்று சமர்ப்பிக்கப்படுதல். |

''*பொதுவான அணுகுமுறையை பின்பற்றுவதால் நிதிக் கம்பனிகளின் வணிக நடவடிக்கைகள் மீது நெறிப்படுத்தல்களை வழங்குவதற்காக விவேகமற்றிருக்கின்ற நிலைமைகள் காணப்படுகின்றன. உரிய கம்பனிகளின் பணிப்பாளர் சபை வெவ்வேறு இடர் முகாமைத்துவ கட்டமைப்புக்கள் மற்றும் வணிக மாதிரிகளுடன் செயற்படுவதால் அவர்களிற்கு தீர்மானம் எடுத்தல் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.*'' என வங்கியின் நாணயச் சபை செயலாளர் இது தொடர்பில் எனக்கு அறிவித்திருந்தார்.

**4.2 சர்ச்சைக்குரிய தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்**

---

தீர்ப்பனவு செய்தல் இடரைக் குறைப்பதற்கும் தீர்வை செய்தல் மற்றும் தீர்ப்பனவு செயன்முறை என்பவற்றை வலுப்படுத்துவதற்கும் நிதிச் சந்தைகளில் மத்திய கொடுக்கல் வாங்கல் பொறிமுறையொன்றை (Central Counter Party Mechanism) (சீசீபி) அமுல்ப்படுத்துவதற்காக மதியுரை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக 2015 சனவரி மாதத்தின் போது மதியுரையாளரொருவர் நியமனம் செய்யப்பட்டிருந்தார். வங்கி, கொழும்பு பங்குப் பரிவர்த்தனை மற்றும் பிணையங்கள்

பரிவர்த்தனை ஆணைக்குழு என்பவற்றிற்கிடையே ஏற்படுத்தப்பட்ட முத்தரப்பு உடன்படிக்கையின் பிரகாரம் மதியுரைக் கட்டணம் உள்ளடங்கலாக செயற்திட்டத்தின் கிரயம் அவர்களிற்கிடையே சமமாக பங்கிடப்படும். அதற்கிணங்க வங்கியின் பங்கொன்றாக செயற்திட்டத்தின் முதலாவது கட்டத்தின் ஆலோசனைக் கட்டணத்திற்காக ரூபா 22.2 மில்லியன் தொகையை வங்கி செலவிட்டிருந்தது. எவ்வாறாயினும், வங்கியானது 2015 ஆம் ஆண்டில் இவ் முத்தரப்பு உடன்படிக்கையை மீளப்பெற்றிருந்ததுடன் செயற்திட்டத்தின் ஏனைய நான்கு கட்டங்களும் பூர்த்தி செய்யப்படாமல் முத்தரப்பு உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்டிருந்தது.

## 4.3 பெறுகை மற்றும் ஒப்பந்த செயன்முறை

### 4.3.1 யூஎஸ்ஏ மற்றும் பிறேசிலிலுள்ள வங்கியால் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனங்கள்

“2017 பெப்ரவரி 09 இல் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் (mortion) பிரகாரம் பிறேசிலிலுள்ள இலங்கை தூதுவராலயத்திற்கான அலுவலகம் மற்றும் ஐக்கிய நாடுகள், நியூ யோர்க், யூஎஸ்ஏ இற்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதிக்கான அலுவலகம் (Office for the Permanent Representative) ஆகிய ஒவ்வொரு அலுவலகம் தொடர்பாகவும் தனித்தனியாக கொள்வனவு செய்வதற்காக இலங்கை மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் தொடர்பாக கவனம் செலுத்தி அறிக்கையிடுவதற்கான பாராளுமன்ற தெரிவுக் குழு” 2017 மே 23 இல் நியமனம் செய்யப்பட்டது.

மேற்படி ஆதனங்களின் காணியின் பெறுமதி தொடர்பாக தனித்தனியாக அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியை குழு அறிவுறுத்தியதுடன் அதற்கிணங்க அறிக்கையானது 2017 செப்தெம்பர் 20 இல் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர் மேற்படி விடயம் தொடர்பாக குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் மீதான இன்னொரு அறிக்கையை சமர்ப்பிப்பதற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியை குழு அறிவுறுத்தியதுடன் அவ் அறிக்கையும் 2017 நவம்பர் 24 இல் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. மேற்படி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட பிரதான அவதானிப்புக்கள் பின்வருமாறுள்ளன.

(அ) வெளிநாட்டில் ஆதனங்களை கொள்வனவு செய்து நியூ யோர்க்கிலுள்ள இலங்கை யூஎன் இன் தூதரக நோக்கத்திற்காக (diplomatic missions) வாடகைக்கு விடுதலின் சாத்தியத்தன்மையை கருத்தில் கொள்வதன் மூலமும் ஆதனங்களின் கொள்வனவிற்காக நியமிக்கப்பட்ட குழுவிடமிருந்து பரிந்துரையை பெற்றுக்கொள்வதன் மூலமும் வெளிவிவகார அமைச்சின் செயலாளரின் எழுத்துமூலமான கோரிக்கையின் பின்னர் ஆதனங்களின் கொள்வனவிற்காக நாணயச் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) நாணயச் சட்டத்தின் 117 ஆம் பிரிவின் ஏற்பாடானது மத்திய வங்கி அதன் உரிமைக் கோரிக்கைகள் எவற்றையேனும் திருப்திப்படுத்தும் விடயத்தில் ஏதாவது வழியில் கொள்வனவில் ஈடுபடுமானால் அத்தகைய ஆர்வம் தவிர்ந்த ஏதாவது வியாபாரத்தில் ஈடுபடுவதிலிருந்து அல்லது வேறுவகையில் வர்த்தகம், கைத்தொழில் அல்லது ஏனைய கையேற்றலில் நேரடியான ஆர்வத்தை கொண்டிருப்பதிலிருந்து மத்திய வங்கியை தடுக்கின்றது. மத்திய வங்கி எதிர்காலத்தில் அதன் சொந்தப் பயன்பாட்டிற்காக அத்தகைய கட்டிடங்கள் தேவைப்படுகின்ற அத்தகைய காலம் வரை சந்தை விலைவீதங்களில் இலங்கையின் இராஜதந்திர தூதரக நோக்கங்களிற்காக அத்தகைய கட்டிடங்களை வாடகைக்கு விடும் நோக்கத்துடன் தெரிவு செய்யப்பட்ட சர்வதேச ரீதியான நகரங்களிலுள்ள அலுவலகங்களிற்குப் பொருத்தமான கட்டிட ஆதனங்களை கொள்வனவு செய்வதற்கான நாணய சபையின் தீர்மானமானது வணிக ரீதியான தொழில் நிறுவனமொன்றின் பண்புகளை கொண்டிருக்க வேண்டிய ஆதனங்களை வாடகைக்கு விடுவதால் மேற்படி தேவைப்பாட்டிற்கு முரணாக காணப்பட்டது.

(இ) 1949 இன் 58 ஆம் இலக்க நாணயச் சட்டத்தின் (எம்எல்ஏ) 5, 9(2) மற்றும் 10(ஈ) பிரிவுகளிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் அசைவற்ற ஆதனத்தை கொள்வனவு செய்வதற்கான அதிகாரங்களை நாணயச் சபை கொண்டிருந்தது என சட்டமா அதிபர், 2016 பெப்ரவரி 25 ஆம் திகதிய அவரது கடிதத்தின் மூலம் அறிவித்திருந்தார். எவ்வாறாயினும் அத்தகைய ஆதனங்களை வாடகைக்கு விடுதல் எம்எல்ஏ இன் 117 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட தடைசெய்யப்பட்டதனுள் வரும் என மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஈ) ஐ.அ.டொலர் 5.25 மில்லியனிற்கு மேற்படாத சலுகையொன்றில் ஏற்கனவேயிருந்த பாகப் பிரிவினைகள் (partitioning) மற்றும் தளபாடங்களுடன் மேற்படி ஆதனத்தை கொள்வனவு செய்யவதற்கென அரசாங்க பிரதான மதிப்பீட்டாளர் உள்ளடங்கிய குழு பரிந்துரை செய்திருந்த போதிலும் கொள்வனவு செய்த சமயத்தில் நியூ யோர்க்கிலுள்ள ஆதனம் மீதான தனியான விலைமதிப்பீட்டு அறிக்கையொன்று சுயாதீனமான மதிப்பீட்டாளரொருவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) நியூ யோர்க்கிலுள்ள ஆதனம் தொடர்பாக 2010 செப்தெம்பர் 10 ஆம் திகதிய ஏடிஎம்/57 ஆம் இலக்க அவரது கடிதத்தின் மூலம் நியூ யோர்க்கிலுள்ள யூஎன் இற்கான இலங்கை நிரந்தரப் பிரதிநிதியால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை குழுவின் அறிக்கை உள்ளடக்கியிருந்தது. பரிந்துரைகளின் பிரகாரம் தளம் மிகச் சிறந்த நிலையில் காணப்பட்டதுடன் இரண்டு மேலதிக மலசலகூடங்களை நிர்மாணிப்பது தவிர ஏதாவது உள்ளக புதுப்பித்தல்கள் தேவைப்படாது. எவ்வாறாயினும் மேற்படி பரிந்துரைகளிற்கு முரணாக நியூ யோர்க்கிலுள்ள யூஎன் இற்கான பிரதி நிரந்தரப் பிரதிநிதி 2011 ஏப்ரல் 19 ஆம் திகதிய என்வை/ஏடிஎம்/57 ஆம் இலக்க அவரது கடிதத்தின் மூலம் மூன்று மேலதிக மலசலகூடங்கள், தளத்திற்கு மீள காப்பெற்றிடுதல் மற்றும் சில பாகப் பிரிவுபடுத்தல் வேலைகள் போன்ற சில முன்னேற்றங்களிற்காக ஏறத்தாழ ஐ.அ.டொலர் 400,000 மேலதிக தொகையொன்றை கோரியிருந்தார். அதற்கிணங்க முன்னேற்றங்களிற்காக ஐ.அ.டொலர் 395,000 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் இரண்டு மேலதிக மலசலகூடங்களை நிர்மாணிப்பதற்கு மேலதிகமாக அதிக வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. (இரண்டு (2) புதிய மலசலகூடங்களை நிர்மாணிப்பதற்கான கிரயம் ஐ.அ.டொலர் 39,500) ஆக இருந்தது.

வங்கியானது பிறேசில் மற்றும் நியூ யோர்க்கிலுள்ள ஆதனங்களை முறையே 2018 மே 03 மற்றும் 2018 மே 30 ஆம் திகதிகளில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு மாற்றியிருந்தது. 2017 ஆம் ஆண்டிற்கான பொதுத் திறைசேரிக்கான இலாப ஒதுக்கீட்டிலிருந்து அவை தொடர்பாக ரூபா 734.3 மில்லியன் உள்ளபடியான கிரயமொன்று 2018 மார்ச் 28 இல் அறவீடு செய்யப்பட்டிருந்தது.

### 4.3.2 தூய்மைப்படுத்தல் சேவைகள் மற்றும் துப்பரவாக்கல் சேவை ஏற்பாடுளிற்கான பெறுகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இது தொடர்பாக துப்பரவாக்கல் சேவை கம்பனியொன்றுடன் செய்துகொள்ளப்பட்ட முன்னைய ஒப்பந்த உடன்படிக்கை ரூபா 35,404,073 ஆன முன்னைய ஒப்பந்த விலையில் (வற் தவிர) 7.5 சதவீத அதிகரிப்புக்குட்படுத்தி 2015 ஒக்தோபர் 01 தொடக்கம் 2017 செப்தெம்பர் 30 வரையான மேலும் இரண்டு வருட காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக வங்கிக்கு சொந்தமான பல மாடி கார் தரிப்பிடத்திற்கான துப்பரவாக்கல் மற்றும் தூய்மைப்படுத்தல் சேவைகளிற்கான ஒப்பந்தமும் ரூபா 983,446 (வற் தவிர) வருடாந்த ஒப்பந்த விலையில் மேற்குறிப்பிடப்பட்ட இரண்டு ஆண்டு காலப்பகுதிக்காக குறிப்பிட்ட கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க மொத்த வருடாந்த ஒப்பந்த விலை (வற் தவிர) ரூபா 36,385,519 ஆக இருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந் நோக்கத்திற்காக கேள்விகளை கோரி புதிய ஒப்பந்ததாரரொருவரை தெரிவு செய்வதற்காக 2015 யூலை 21 இல் ஆளுநரின் அங்கீகாரத்தின் கீழ் பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு என்பன நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும் புதிய ஒப்பந்ததாரரொருவரை தெரிவு செய்வதற்காக கேள்விகளை கோராமல் முன்னைய கம்பனியுடன் ஏற்கனவேயுள்ள துப்பரவாக்கல் சேவைகளிற்கான ஒப்பந்த உடன்படிக்கை நீடிக்கப்பட்டிருந்தது.

*''காலாவதியான சமயத்தில் இரண்டு தரப்பினர்களிற்குமான பரஸ்பர உடன்பாட்டுடனான நிபந்தனைகள் மீது அதே ஒப்பந்தத்தை நீடிப்பதற்கான ஏற்பாட்டை முன்னைய ஒப்பந்த உடன்படிக்கை கொண்டிருந்தது. இரண்டு ஆண்டு ஒப்பந்த காலப்பகுதியின் போது இத் தன்மையான ஒப்பந்தங்களுடன் சம்பந்தப்பட்ட வேதனங்கள், இரசாயனங்கள் மற்றும் ஏனைய வளங்களை அதிகரிப்பதை அடிப்படையாகக் கொண்டு பிரயோகிக்கப்பட்ட 7.5 சதவீத அதிகரிப்பு நியாயமானதாக காணப்படுகின்றது என்கின்ற நோக்கை வங்கி கொண்டிருந்தது.'' என வங்கியின் நாணயச் சபையின் செயலாளர் இது தொடர்பாக எனக்கு அறிவித்திருந்தார்.*

(ii) மேற்படி ஒப்பந்தம் ரூபா 18,193,760 ஒப்பந்த விலையில் (வற் தவிர) 2018 மார்ச் 31 வரை மேலும் நீடிக்கப்பட்டிருந்தது.

(ஆ) திறந்த போட்டிக் கேள்வி நடைமுறைகளின் கீழ் கேள்விகள் கோரப்பட்டிருந்ததுடன் கேள்விகளை மதிப்பீடு செய்த பின்னர் வங்கியின் தலைமை அலுவலகக் கட்டிடம், வங்கி இல்லம், கார் தரிப்பிடம் மற்றும் மணிக்கூட்டுக் கோபுரம் என்பவற்றிற்கான தூய்மைப்படுத்தல் சேவை ஏற்பாட்டிற்கான ஒப்பந்தமானது 2018 ஏப்ரல் 01 இலிருந்து ஆரம்பிக்கும் இரண்டு ஆண்டு காலப்பகுதிக்காக ரூபா 129,188,389 ஆன இரண்டாவது ஆகக்குறைந்த கேள்வி விலையை (வற் தவிர) சமர்ப்பித்திருந்த தனியார் கம்பனியொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது.

வங்கியின் தலைமை அலுவலக வளாகம், சீபீஎஸ்எல் தலைமை அலுவலகத்திலுள்ள கார் தரிப்பிடம், சதம் வீதி மணிக்கூட்டுக் கோபுரம் மற்றும் வங்கி இல்லம் என்பவற்றிற்கான தூய்மைப்படுத்தல் சேவைகளை வழங்குவதற்காக ஆண்டொன்றிற்கான மொத்தக் கிரய மதிப்பீடு ரூபா 41.46 மில்லியனாக காணப்பட்ட போதிலும் வழங்கப்பட்ட ஒப்பந்தத்தின் வருடாந்தக் கிரயம் ரூபா 74.28 மில்லியனாக (வற் தவிர) காணப்பட்டது. ஆகையால் ரூபா 32.82 மில்லியன் அல்லது 79 சதவீதமான அசாதாரண கிரய அதிகரிப்பு கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 4.3.3 2016 ஆம் ஆண்டிற்கான குற்றி நாணயங்களை அச்சிடுதல்

2012 யூன் 27 இல் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சரவை குற்றி நாணயங்களை அச்சிடுவதற்கு சர்வதேச ரீதியான கேள்வியை கோருவதற்கோ அல்லது ஏற்கனவேயுள்ள விநியோகஸ்தர்களிற்கு கட்டளை இடுவதற்கோ இறுதித் தீர்மானம் எடுப்பதற்கு நாணயச் சபைக்கு அதிகாரத்தை வழங்கியிருந்தது.

2015 ஒக்தோபர் 31 இல் உள்ளவாறான இருப்பு மட்டங்கள் மற்றும் குற்றி நாணயங்களின் உயர் கேள்வியை எதிர்நோக்குவதற்காக நிலையாகவுள்ள முதன்மைக் காலம் என்பவற்றை கருத்தில் கொள்ளும் போது நாணயச் சபையானது 2015 நவம்பர் 24 இல் நடைபெற்ற அதன் கூட்டத்தில் 255 மில்லியன் கூட்டுமொத்தமான குற்றி நாணயத் துண்டுகளிற்காக ஏற்கனவேயுள்ள விநியோகஸ்தர்கள்/ நாணயமானவர்களிடம் (mints) கட்டளைகளை இடுவதற்காகவும் பொருட்களின் விலைகள் 2013 ஆம் ஆண்டில் நிலவிய விலை மட்டங்களிலிருந்து கணிசமானளவு வீழ்ச்சியடைந்திருந்தமையை கருத்தில் கொண்டு

கலந்துரையாடி முடிவுசெய்யப்பட்ட விலைகளில் இடப்பட வேண்டிய கட்டளைகளை இடுவதற்காகவும் அங்கீகரித்திருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 – 2015 காலப்பகுதிக்காக வங்கிக்கான 550 மில்லியன் குற்றி நாணயத் துண்டுகளை அச்சிட்டு வழங்குவதற்காக 2012 இல் சர்வதேச ரீதியான கேள்விகள் கோரப்பட்டு மூன்று நாணமானவர்களிற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. வழங்கப்பட்ட ஒப்பந்தம் 2013 – 2015 காலப்பகுதிக்காக மாத்திரம் காணப்பட்டமையால் 2016 ஆம் ஆண்டு மற்றும் அன்று முதல் குற்றி நாணய தேவைப்பாட்டிற்காக சர்வதேச கேள்விகளை கோருவதற்கான பெறுகை செயன்முறை சாத்தியமான நேரத்தில் ஆரம்பிக்கப்பட முடிந்திருந்தது. எவ்வாறாயினும், 2013 இல் கோரப்பட்ட விலைகளை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடி முடிவுசெய்யப்பட்ட விலைகளில் ஏற்கனவேயுள்ள விநியோகஸ்தர்களுடன் 2016 ஆம் ஆண்டிற்காக குற்றி நாணயங்களை அச்சிடும் கட்டளைகளை இடுவதற்காக நாணயச் சபை அங்கீகாரம் 2015 ஒக்தோபர் 31 இல் உள்ளவாறான இருப்பு மட்டங்கள் மற்றும் குற்றி நாணயங்களின் உயர் கேள்வியை எதிர்நோக்குவதற்காக நிலையாகவுள்ள முதன்மைக் காலம் என்பவற்றை சுட்டிக்காட்டி 2015 நவம்பர் 11 இல் கோரப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 1 மற்றும் ரூபா 5 குற்றி நாணயங்களிற்காக ஏற்கனவேயுள்ள விநியோகஸ்தரால் ஆகக் கூடிய விலைகள் கோரப்பட்டமையால் 2016 ஆம் ஆண்டிற்காக ரூபா 5 குற்றி நாணயங்களை அச்சிடுவதற்கான விலைகள் 2013 இன் விலைகளுடன் ஒப்பிடும் போது குற்றிகளின் 1000 துண்டுகளிற்காக ஐ.அ.டொலர் 5.25 ஆல் கணிசமானளவு அதிகரித்திருந்தது. ஆகையால், நாணயச் சபையானது ரூபா 1 குற்றி நாணயங்களை அச்சிடுவதற்கான கட்டளைகளை இடாதிருப்பதற்கும் ரூபா 5 குற்றி நாணயங்களிற்கான கட்டளைகளை ரூபா 40 மில்லியன் வரை குறைப்பதற்கும் தீர்மானித்திருந்தது.

(இ) 2015 நவம்பர் 24 ஆம் திகதிய நாணயச் சபைத் தீர்மானத்தில் குறிப்பிட்டவாறு, பொருட்களின் விலைகள் 2013 ஆம் ஆண்டில் நிலவிய விலை மட்டங்களுடன் ஒப்பிடும் போது கணிசமானளவு வீழ்ச்சியடைந்திருந்தது. எவ்வாறாயினும், ஏற்கனவேயுள்ள விநியோகஸ்தர்களிடமிருந்து மாத்திரம் குற்றி நாணயங்களை அச்சிடுவதற்கான விலைகள் கோரப்பட்டமையால் இவ் விலைகள் வீழ்ச்சியடைவதிலிருந்து அதிகமான இலாபம் பெறப்பட்டிருக்கவில்லை. மறுபுறம், ஏற்கனவேயுள்ள விநியோகஸ்தர்களிடமிருந்து மாத்திரம் குற்றி நாணயங்களை அச்சிடுவதற்கான விலைகள் கோரப்பட்டமையால் விநியோகஸ்தர்களிற்கிடையே போட்டியை ஏற்படுத்தும் வாய்ப்பை வங்கி இழந்திருந்தது. குற்றி நாணயத்தின் கிரயமானது பொதுவாக 42 சதவீதம் தொடக்கம் 68 சதவீதம் வரையான வீச்சிலான உலோகக் கிரயத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) தெரிவுசெய்யப்பட்ட விலைமனுதாரரால் (2016 மார்ச் 08 இல் 2016 இன் குற்றி நாணயத் தேவைப்பாட்டின் மிகுதிப் பகுதிக்காக ஏற்கனவேயுள்ள அனைத்து விநியோகஸ்தர்களிடமிருந்தும் கோரப்பட்ட புதிய கூறுவிலை மீது) ரூபா 2 மற்றும் ரூபா 10 குற்றி நாணயங்களிற்காக கோரப்பட்ட விலைகள் மேலே காட்டப்பட்டவாறு 2015 திசெம்பர் 02 இல் ஏற்கனவேயுள்ள விநியோகஸ்தரால் கோரப்பட்ட விலைகளுடன் ஒப்பிடும் போது கணிசமானளவு குறைவடைந்திருந்தது. ரூபா 2 மற்றும் ரூபா 10 குற்றி நாணயங்களிற்கான விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சிகள் முறையே ஐ.அ.டொலர் 5.21 மற்றும் ஐ.அ.டொலர் 1.13 ஆகும்.

## 4.4 முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டு தீர்வு காணப்படாத விடயங்கள்

---------------------------------------------------------------------------------------------------------------------------------------எனது முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட சில விடயங்களிற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்வு காணப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

**(அ) வங்கியின் கட்டிடங்களை வாடகைக்கு விடுதல்**

நாணயச் சட்டத்தின் 117 ஆம் பிரிவின் பிரகாரம், ''வங்கியானது அதன் கோரிக்கைகளில் எவற்றையேனும் திருப்திப்படுத்தும் விடயத்தில் ஏதாவதையும் கொள்வனவு செய்யக்கூடுமானால் அவ்வாறான ஆர்வம் தவிர்ந்த எந்தவொரு வியாபாரத்தில் அல்லது நேரடியாக ஆர்வம் கொண்ட வர்த்தக, கைத்தொழில் அல்லது வேறு கையேற்றலில் ஈடுபடாதிருத்தல் வேண்டும்''. இந்த ஏற்பாட்டுக்கு முரணாக வங்கிக்குச் சொந்தமான பின்வரும் கட்டிடங்கள் குறித்துரைத்த நோக்கங்களிற்காக பயன்படுத்திக்கொள்ளப்படாது வெளித் தரப்பினர்களிற்கு வாடகைக்கு விடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் ரூபா 476,418,155 வாடகை வருமானத்தை வங்கி ஈட்டியிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| ஆதனத்தின் பெயர் | வாடகைக்கு விடப்பட்ட காலப்பகுதி | வாடகைக்குப் பெற்றவரின் பெயர் | மாதாந்த வாடகை |
|---|---|---|---|
| மத்திய புள்ளிக் கட்டிடம் (தரைத் தளத்தின் ஒரு பகுதி, 2 ஆம் மற்றும் 3 ஆம் மாடிகள்) | 2016 நவம்பர் 27 முதல் 2017 நவம்பர் 26 வரை | நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு - இலங்கை பொலிஸ் | ரூபா 2,600,000 |
| வங்கியின் தலைமை அலுவலகம் (4 ஆம் மற்றும் 5 ஆம் கோபுரத்தின் 12 ஆம் மட்டம்) | 2016 நவம்பர் 28 முதல் 2018 நவம்பர் 27 வரை | ஈபீஎவ் திணைக்களம் | ரூபா 1,654,000 |
| வங்கியின் தலைமை அலுவலகம் (3 ஆம் மற்றும் 5 ஆம் கோபுரத்தின் 5 ஆம் மட்டம் மற்றும் 1 ஆம் கோபுரத்தின் 1 ஆம் மட்டம்) | 2016 சனவரி 01 முதல் 2017 திசெம்பர் 31 வரை | ஈபீஎவ் திணைக்களம் | ரூபா 3,213,860 |
| லியோட் (lioyed) கட்டிடம் | 2016 ஏப்ரல் 01 முதல் 2017 திசெம்பர் 31 வரை | ஈபீஎவ் திணைக்களம் | ரூபா 6,752,500 |
| மத்திய புள்ளிக் கட்டிடம் - 4 ஆம் மற்றும் 5 ஆம் மாடிகள் | 2016 திசெம்பர் 01 முதல் 2017 நவம்பர் 30 மற்றும் 2018 நவம்பர் 01 வரை | வரையறுக்கப்பட்ட சீஎச்சீ போர்ட் சிற்றி கொழும்பு (தனியார்) கம்பனி | ரூபா 5,540,658 (1 ஆம் ஆண்டு) ரூபா 5,956,218 (2 ஆம் ஆண்டு) |
| வங்கியின் தலைமை அலுவலகம் (5 ஆம் கோபுரத்தின் 15 ஆம் மற்றும் 16 ஆம் மட்டம்) | 2016 திசெம்பர் 01 முதல் 2018 நவம்பர் 30 வரை | செயற்திட்ட முகாமைத்துவ கண்காணிப்புத் திணைக்களம், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு | ரூபா 2,141,480 |
| வங்கி கற்கைகளிற்கான நிலையம், ராஜகிரிய – விடுதித் தொகுதி | 2016 யூலை 01 முதல் 2018 யூன் 30 வரை | விசேட அதிரடிப் படை - இலங்கை | ரூபா 220,000 |
| அநுராதபுரம் பிராந்திய | 2016 செப்தெம்பர் 03 | வரையறுக்கப்பட்ட ஏபீ | ரூபா 230,000 |

| | | | |
|---|---|---|---|
| அலுவலகத்தின் ஒரு பகுதி | முதல் 2018 மார்ச் 02 வரை | செக்கியூரிட்டீஸ் (தனியார்) கம்பனி | |
| ‘‘வைட்எவேய்ஸ்’’ கட்டிடம் - 2 ஆம் மாடி | 2015 நவம்பர் 01 முதல் 2018 ஒக்தோபர் 31 வரை | சட்ட ஒழுங்குகள் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு | ரூபா 2,070,000 |
| ‘‘வைட்எவேய்ஸ்’’ கட்டிடம் - தரைத் தளம் | 2015 நவம்பர் 01 முதல் 2018 ஒக்தோபர் 31 வரை | கடன் தகவல் பணியகம் | ரூபா 4,140,000 |
| மாத்தறை பிராந்திய அலுவலகத்தின் ஒரு பகுதி | 2014 செப்தெம்பர் 15 முதல் 2018 மார்ச் 14 வரை | வைரயறுக்கப்பட்ட ஏபீ செக்கியூரிட்டீஸ் (தனியார்) கம்பனி | ரூபா 265,816/ 2017/09/15 தொடக்கம் ரூபா 332,270 |
| பிறேசிலிலுள்ள ஆதனம் | 2015 பெப்ரவரி 01 முதல் 2017 திசெம்பர் 31 வரை | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு | ஐ.அ.டொலர் 9,000 |
| நியூ யோர்க்கிலுள்ள ஆதனம் - யூஎஸ்ஏ | 2015 யூன் 01 முதல் 2017 திசெம்பர் 31 வரை | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு | ஐ.அ.டொலர் 68,000 |

பிறேசில் மற்றும் நியூ யோர்க்கிலுள்ள ஆதனங்களின் உரிமையினை அவற்றின் சந்தைப் பெறுமதியில் அரசாங்கத்திற்கு கைமாற்றுவதற்கு 2016 மே 10 ஆம் திகதி வங்கியின் நாணயச் சபை தீர்மானித்திருந்தது. வங்கியினால் குறித்த ஆதனங்களிற்கு செய்யப்பட்டிருந்த ரூபா 734.3 மில்லியன் உண்மையான கிரயத்தில் ஆதனங்களை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுச் (எம்எவ்ஏ) செயலாளரின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக 2016 நவம்பர் 23 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. பிறேசில் மற்றும் நியூ யோர்க்கிலுள்ள கட்டிட ஆதனங்களின் உரிமையை மாற்றுகின்ற உரித்துறுதிகள் முறையே 2018 மே 3 மற்றும் 2018 மே 30 இல் கையொப்பமிடப்பட்டிருந்தன. 2018 மார்ச் 28 இல் 2017 ஆம் ஆண்டிற்கான இலாப ஒதுக்கீட்டிலிருந்து ரூபா 734.3 மில்லியன் மொத்த உள்ளபடியான கிரயம் அறவிடப்பட்டிருந்தது.

**(ஆ) குறைபாடுகளுடன் கூடிய செயற்பாடுகள்**

வங்கியானது அதன் நிதிகளை முதலாந்தர வணிகருடன் வர்த்தகம் செய்யக்கூடிய பின்னோக்கிய மீள்கொள்வனவு (tradable reverse Repo) முதலீடுகளில் முதலீடு செய்திருந்தது. மீளப் பெறப்பட்ட பிணையங்கள் தொடர்பில் எவ்வித பிணைகளையும் மீண்டும் மதிப்பீடு செய்யாமல் கருதுகோளான பிணையங்களை முதலாந்தர வணிகர் மீளப் பெற்றிருந்ததன் காரணமாக இந்த முதலீடுகள் தொடர்பில் லங்கா செக்கியூவர் சிஸ்ரம் (Lanka Secure System) பூச்சிய மீதியை காண்பித்திருந்தது. 2015 திசெம்பர் 04 இல் மேற்கொள்ளப்பட்ட சபைத் தீர்மானத்தின் பிரகாரம், உத்தரவாதமளிக்கப்பட்ட பிணைகள் (collaterals) இன்றி மேற்படி முதலீடுகளில் மீண்டும் மீண்டும் முதலீடு செய்வதற்கு வங்கியின் நாணயச் சபை தீர்மானித்திருந்தது. இந்த முதலாந்தர வணிகருடன் வங்கியின் நிதிகள் மற்றும் வங்கியால் முகாமை செய்யப்பட்ட நிதிகள் என்பவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்த உத்தரவாதமளிக்கப்பட்ட பிணைகள் இன்றி மீள்கொள்வனவு செய்யப்பட்ட முதலீட்டு நிலுவை ரூபா 2.4 பில்லியனாக இருந்தது.

2012 திசெம்பர் 10 மற்றும் 2012 திசெம்பர் 14 ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்டிருந்த முன்னைய பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்த

குறித்த வணிகரின் வரம்பு மீறுதல்கள் தொடர்பில் (சில வாடிக்கையாளர்களிற்கு போதியளவு பிணையங்கள் ஒதுக்கப்படாமை மற்றும் நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதிகளை (Intra-day Liquidity Facilities (ILF)) பெற்றுக்கொள்வதற்காக வாடிக்கையாளர் பிணையங்களை பயன்படுத்துதல்) அவருக்கு எச்சரிக்கை கடிதங்களையும் 2013 யூன் 06 ஆம் திகதிய நெறிப்படுத்தலையும் வங்கி வழங்கியிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. வங்கியால் சீராக்கல் நடவடிக்கைகள் எடுக்கப்படாமை காரணமாக குறித்த முதலாந்தர வணிகரினால் மேற்கொள்ளப்பட்ட அதே முறையற்ற செயற்பாடுகள் 2015 ஆம் ஆண்டில் மீண்டும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அத்துடன், வங்கியின் பொதுப் படுகடன் திணைக்களத்தின் (பிடிடி) மேற்பார்வைப் பிரிவு 2015 மே 31 இல் உள்ளவாறு 2015 மே 20 மற்றும் 2015 மே 21 ஆம் திகதிகளில் உள்ளவாறு குறித்த முதலாந்தர வணிகர் தொடர்பாக களப் பரிசோதனையை (on-site examination) மேற்கொண்டிருந்தது. மேற்குறிப்பிட்ட வரம்பு மீறுதல்கள் உள்ளடங்கலாக வெவ்வேறு பிரமாணங்கள் மற்றும் நெறிப்படுத்தல்களின் வரம்பு மீறுதல்கள் மேற்படி களப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டிருந்தன.

பின்னர் ஆளுநர் 2017 சனவரி 30 இல் நடைபெற்ற 3/2017 ஆம் இலக்க நாணயச் சபையின் கூட்டத்தில் அதனால் தீர்மானிக்கப்பட்டவாறு குறிப்பிட்ட முதலாந்தர வணிகர் தொடர்பிலான வங்கியின் நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகளை பரிசோதனை செய்து அதன் மீதான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்கு குழுவொன்றை நியமித்திருந்தார். பரிசோதனையின் பின்னர், காலப்பகுதிக்கு மேலான பொறுமையான மேற்பார்வை காணப்பட்டமை மற்றும் சில சந்தர்ப்பங்களில் அறிக்கையிடல் வரிசையின் அனைத்து மட்டங்களிலும் விவேகமான முதலீட்டுத் தீர்மானங்கள் தொடர்ந்து எடுக்கப்பட்டிருக்கவில்லை என்கின்ற முடிவுகளிற்கு குழு வந்திருந்தது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளுதல்

2030 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலிற்கு இணங்க ஒவ்வொரு அரசாங்க நிறுவகமும் செயற்பட வேண்டிய போதிலும் வங்கியின் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அவ் இலக்குகளை அடைந்துகொள்வது தொடர்பான இலக்கு கட்டங்களுடன் சேர்த்து அவற்றின் செயற்பாடுகள் தொடர்பான இலக்குகள் மற்றும் அத்தகைய இலக்குகளை அடைந்துகொள்வதை மதிப்பீடு செய்வதற்கான சுட்டிகள் என்பவற்றை இனங்காண்பதற்கான நடவடிக்கைகளை வங்கி எடுத்திருக்கவில்லை.

*''வங்கியானது நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (எஸ்டிஜீஎஸ்) நேரடியாக அடைந்துகொள்வதற்கு உதவுவதற்கான சட்டரீதியான கட்டளையையோ அல்லது கருவிகளையோ கொண்டிருக்கவில்லை. வங்கியின் நிதிகள் எஸ்டிஜீஎஸ் ஐ அடைந்துகொள்வதற்காக பயன்படுத்தப்பட முடியாததால் அதையும் குறிப்பிடலாம்'' என வங்கியின் நாணயச் சபையின் செயலாளர் இது தொடர்பாக எனக்கு அறிவித்திருந்தார்.*

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் வங்கியின் ஆளுநரின் கவனத்திற்கு காலத்திற்குக் காலம் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | வங்கியல்லாத நிதி நிறுவனங்களின் மேற்பார்வை | முதலாந்தர வணிகர் ஒருவரினால் விதிகள் மீறப்பட்டிருத்தல். |

| | | |
|---|---|---|
| (ஆ) | திறைசேரி பிணைமுறி தொகுதிகளை (Treasury bills portfolio) பேணுதல் | திறைசேரி பிணைமுறித் தொகுதிகளை பேணுவதற்கு முறையாக வடிவமைக்கப்பட்ட முறைமை தொழிற்பாட்டை பயன்படுத்துவதற்குப் பதிலாக எக்சல் சீற்றை (Excel Sheet) பயன்படுத்தி கைமுறையாக இலங்கை அரசாங்க பிணையங்களின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தது. |
| (இ) | பொருளிருப்புக்கள் மீதான கட்டுப்பாடு | (i) பொருளிருப்புக்களை பெறுமதியிடுவதற்காக உயர் மனித தவறுகளிற்கு இலகுவாக வழிவகுக்கக்கூடியதாகவுள்ள கைமுறையாக வடிவமைக்கப்பட்ட நிறையளிக்கப்பட்ட சராசரி முறையை பயன்படுத்துதல்.<br><br>(ii) மெதுவாக அசைகின்ற மற்றும் பழுதடைந்த பொருளிருப்பு உருப்படிகளை இனங்காண்பது தொடர்பாக அங்கீகரிக்கபப்பட்ட கொள்கை காணப்படாமை. |
| (ஈ) | சைபர் (Cyber) பாதுகாப்பு ஆளுகை கட்டமைப்பு | வங்கியானது சைபர் பாதுகாப்பு ஆளுகை கட்டமைப்பு எதனையும் ஆவணப்படுத்தியோ/ வரையறுத்தோ இருக்கவில்லை. |
| (உ) | கணக்கீடு | அட்மின் (Admin) மூலம் ஐகிளாஸ் (iGLAS) முறைமையில் மீதிகளுடனான பேரேட்டுக் கணக்குகளையும் பரீட்சை மீதிக்கு எடுக்கப்படாத செயற்பாடற்ற கணக்குகளையும் செயற்பாடற்றதாக்குவதற்கான சாத்தியத்தன்மை |